செ.வெ.எண் :05/ஏப்ரல் நாள்:03.04.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து மதம் சார்ந்த பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து மதம் சார்ந்த பிரதிநிதிகளுடன் கலந்தாய்வு கூட்டம் இன்று (03.04.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 144 தடை உத்தரவிற்கு பெரும்பான்மையான மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இருப்பினும், ஒரு சில இடங்களில் விதி மீறல்கள் கண்டறியப்பட்டு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய விதி மீறல்களை முற்றிலுமாக தவிர்த்து பொதுமக்கள் தாமாக முன்வந்து 100 சதவீதம் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும்.

மேலும், டெல்லி மாநாட்டில் நமது இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து 41 நபர்கள் பங்கேற்றுள்ளனர். அவர்களில் 25 நபர்கள் மட்டும் நமது மாவட்டத்திற்கு திரும்பியுள்ளனர். இவர்கள் அனைவரும் அரசினுடைய தனிமைப்படுத்தும் மையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் தனிமைப்படுத்தப்பட்டதோடு கொரோனா பரிசோதனைக்காக மாதிரி (Sample) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் நேற்று (02.04.2020) 2 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்றைய தினம் (03.04.2020) வரப்பெற்ற முடிவில் 15 நபர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 நபர்களின் பரிசோதனை முடிவுகள் நாளைக்குள் வருமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், வெளிநாடுகளிலிருந்து மாவட்டம் திரும்பிய 2,468 நபர்கள் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவாமல் நம்மை நாமே பாதுகாத்திட ஒருவருக்கொருவர் சமூக இடைவெளியை கடைபிடித்தல், கைகளை சுத்தமாகக் கழுவுதல், தேவையற்ற பயணங்களை தவிர்த்தல் வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களும் நல்லிணக்கத்துடன் ஒற்றுமையாக உள்ளனர். இந்நிலையில் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாக பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாக பேஸ்புக், வாட்ஸ்ஆப் போன்ற சமூக ஊடகங்களில் தவறான தகவல்கள்/செய்திகளை வெளியிடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்ற காலங்களில் அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைத்து தரப்பினரும் ஒற்றுமையாக இருந்து முழு ஒத்துழைப்பு அளித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.லயோலா இக்னேஷியஸ், பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.தங்கவேலு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஜி.கோபு உட்பட அரசு அலுவலர்கள், பல்வேறு மதத் தலைவர்கள்/பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**